சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **153 / 2016**

பெயர்: குருமூர்த்தி பி.வா.சா. 4 தேதி **18.03.2025**

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நகை வியாபாரம் செய்து வருகிறேன். நான் அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ள நிலையில் வழக்கு குறித்த எந்த விவரமும் தெரியுமா என்றால் வழக்கு குறித்த எந்த விவரமும் தெரியாமல் தான் சாட்சியம் அளிக்க வந்தேன். அழைப்பாணையை நான் பெற்றதற்கு பின்னிட்டு கோபால் என்னை சந்தித்தாரா என்றால் சந்தித்தார். பி.வா.சா.ஆ.5 உயிலில் யார் ஏற்பாடு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கோபால் கேட்டுக்கொண்டதற்காக கையெழுத்து எதுவும் செய்தேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.5 உயிலினை நான் படித்து பார்த்தேனா என்றால் அக்காலகட்டத்தில் நான் படித்து பாத்தேன் தற்பொழுது ஞாபகம் இல்லை. கோபால் என்னிடம் பி.வா.சா.ஆ.5 உயிலை காண்பித்தாரா என்றால் அவரை சந்தித்தேன் ஆனால் உயிலை அவர் என்னிடம் காண்பிக்கவில்லை. மேற்படி பி.வா.சா.ஆ.5 உயிலானது அக்காலகட்டத்தில் யாரால் எழுதப்பட்டது, யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்கின்ற விவரம் எனக்கு தெரியாது. பாப்பம்மாள் எப்பொழுது இறந்தார் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். பாப்பம்மாள் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. பாப்பம்மாள், எவ்வாறு கையெழுத்து இடுவார் என்றால் பாப்பம்மாள் என்று சேர்த்து கையெழுத்து இடுவாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நானும், கோபாலும் நகை வியாபாரம் செய்து வருவதாலும் கோபால் போலியாக தயாரித்த உயில் ஆவணத்தில் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால்ச ரியல்ல.

பாப்பம்மாள் எவ்வாறு கையெழுத்து இடுவார் என்பது குறித்தும் என்னுடன் சாட்சி கையொப்பம் இட்டவர் யார் என்று தெரியாமலும் உயிலை யார் எழுதி வைத்தது என்று தெரியாமலும் கோபால் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.